DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Judicial Magistrate, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 221/2020** |
| Deposition of Witness for | : PW 6 |
| Name | :டாக்டர்.திரு.ஜெயலட்சுமி |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 02.07.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 02th July 2026.

**எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது இராஜபளையம் அரசு மருத்துவமனையில் மகப்பேரு பிரிவில் மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பாக சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையில் மருத்துவராக பணிபுரிந்த போது கடந்த 30.11.2019 ம் தேதி காலை 11.00 மணியளவில் நான் மருத்துவ பணியில் இருந்தபோது 26 வயது மதிக்கத்தக்க மாரியம்மாள் த/பெ. முனியான்டி சிவஞானபுரம் அவர் சிகிச்சைக்காக என்னிடம் வந்தார். அவர் என்னிடம் ராமர் என்பர் 3 வருடங்களாக காதலித்ததாகவும், 5 முறை உடல்

உறவு கொண்டதாகவும் என்னிடம் கூறினார். ஏற்கனவே 2 முறை கருக்கலைப்பு செய்ததாகவும் என்னிடம் கூறினார். தற்போது 2 மாதம் கர்ப்பமாக இருப்பதாகவும் கூறினார். இரத்தபோக்கு இருப்பதாக கூறினார். அவரை நான் பரிசோதனை செய்து பார்த்தபோது நாடிதுடிப்பு சீராக இருந்தது. அவருக்கு உடம்பில் வெளிப்புற காயம் எதுவும் இல்லை. அவருக்கு நான் ஸ்கேன் எடுத்து பார்த்ததில் 11 வாரக்கரு துடிப்பு இல்லாத நிலையில் இருந்தது. அதற்காக மேல்சிகிச்சைக்காக திருநெல்வேலி TVMCH மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தேன். என்னிடம் காட்டப்படும் விபத்து பதிவேடு நான் வழங்கியது தான். அந்த **விபத்து பதிவேடு அ.சா.ஆ.2 ஆகும்.** வழக்கு சம்மந்தமாக போலிசார் விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

மருத்துவ நிலை ஆணைகளின் படி விபத்து பதிவேட்டில் பாதிக்கப்பட்ட நபர் தெரிவிக்கும் பெயரை குறிப்பிடக்கூடாது என்றால் சரிதான். விபத்து பதிவேட்டில் இராமர் என்பவர் பெயர் மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது அவரின் தகப்பனாரின் பெயர் எந்த ஊரை சார்ந்தவர் என்ற விபரங்கள் விபத்து பதிவேட்டில் காணப்படவில்லை என்றால் சரிதான். பாதிக்கப்ப்டட நபர் காவல் துறை மூலம் காவல் துறை நமூனா எதுவும் பெறாமல் மருத்துவ சிகிச்சையில் சேர்ந்தார் என்றால் சரிதான். பாதிக்கப்பட்ட நபர் 2 முறை கருக்கலைப்பு செய்துள்ளார் என்று தங்களிடம் கூறியதின் அடிப்படையில் அது குறித்து விபத்துபதிவேட்டில் ஏதேனும் பாதிக்கப்பட்டவரை பரிசோதனை செய்து அதன் அடிப்படையில் விபத்து பதிவேட்டில் குறிப்பிட்டுள்ளீர்களா என்றால் பாதிக்கப்பட்டவர் அது குறித்து ஆவணங்கள் எதுவும் கொண்டு வராததால் குறிப்பிடவில்லை. பாதிக்கப்பட்ட நபர் கூறும் தகவலின் அடிப்படையில் அவரை பரிசோதனை

செய்து கருக்கலைப்பு செய்யப்பட்டதா என்பதை கூற முடியும் என்றால் சரிதான். நான் பாதிக்கப்பட்டவரை முதல் கட்டமாக பரிசோதனை செய்து மேல் பரிசோதனைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன் என்றால் சரிதான். நான் பாதிக்கப்பட்ட நபர்என்னிடம் சிகிச்சைக்கு வந்தஉடனே காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவித்தேனா என்றால் உடனடியாக தகவல் தெரிவித்தேன். நான் வழங்கிய விபத்து பதிவேட்டில் பாதிக்கப்பட்ட நபருடன் வேறு யாரும் வந்தார்கள் விபரம் துலங்காது என்றால் சரிதான்.

**மறு விசாரணை இல்லை.**

(Sd/-)M.Mari
Judicial Magistrate,
Sankarankovil.